# கலிகமுவ பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கலிகமுவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கலிகமுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

(அ) மீளாய்வாண்டின் போது திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கில் ரூபா 6,236,941 தொகையான மீதி சப்ரகமுவ மாகாண சபைப் பிரதான செயலாளருக்கு உரித்தான பெறுமதி ரூபா 1,090,000 தொகையான டிராக்டரும் ரூபா 260,000

தொகையான டிரேலரும் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் சொத்துக்கள் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் சொத்துக்கள் கையேற்கப்படுவதற்காக ஏற்கப்பட்ட மூலதனச் செலவினத் தொகையான ரூபா 2,717,452 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

10 கணக்கீட்டு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,159,562 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கையின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,100,674 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,058,888 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 161,716,013 கூட்டுத்தொகையான 06 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,556,882 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,688,442 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.